முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண்.23/2021

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி புதன் 05 ம் நாள் இன்று இந்த வா.சா.2–ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | அழகப்ப கவுண்டர் | கிராமம் | : | |
| வயது | : | | தாலூக்கா | : | |
| நாள் | : | 05–02–2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

முதல் விசாரணை தொடர்ச்சி:

1.நான் இவ்வழக்கில் வாதி தரப்பில் 2ம் சாட்சி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கடந்த 19.09.1996ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் ஆகும். **கடந்த 19.09.1996ம் தேதியிட்ட உயில் ஆவண எண்.240/1996–ன் அசல் வா.சா.ஆ.14 ஆகும். என்னுடைய ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.15 ஆகும்.** என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. உயில் ஆவணத்தில் வேறு யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.நான் கையெழுத்து செய்தபோது மொத்தம் எத்தனை

பேர் இருந்தார்கள் என்றால் என்னை கையெழுத்து செய்ய சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன். எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது.சார்பதிவாளரிடம் முருகப்ப கவுண்டர் யார் அடையாளம் காட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. முருகப்ப கவுண்டருக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தை யாரும் படித்துக்காட்டினார்களா என்றால் இல்லை. நான் படித்துபாத்தேனா என்றால் இல்லை. முருகப்ப கவுண்டர் கையெழுத்தையும், நான் பார்த்தது இல்லை.

2. வாதி தான் சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.14–க்கு பிறகு முருகப்ப கவுண்டர் உயிருடன் இருக்கும் வரை எத்தனை உயில் ஆவணங்கள் எழுதினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் பொய்யன விபரங்களுடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(கற்றறிந்த 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக முன்மொழிந்து பதிவு செய்யப்பட்டு, சாட்சியம் முடிக்கப்பட்டது.)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.05 17:35:13 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.